# *புனித பெலிக்ஸ் (காந்தாலிஸ்) (1573 – 1587)*

இவர் நிலத்தை உழுது பயிரிட்டு வந்தார். 30-வது வயதில் கப்புச்சின் சபையில் சேர்ந்து துணைச் சகோதரர் ஆனார். உரோமையில் வாழ்ந்த இவர் சந்நியாசிகளுக்காக வீடு வீடாகப் போய் பிச்சை எடுப்பார். கிடைத்த பொருட்களையும், நிந்தைகளையும, இறைவனுக்கு நன்றி, எனும் சொற்களுடன் ஏற்றுக் கொள்வார். எனவே இவருக்கு “இறைவனுக்கு நன்றி சந்நியாசியார்” (Deo GRATIAS BROTHER) என்ற பட்டப்பெயர் கிடைத்தது. இவருக்கு எழுதப் படிக்க தெரியாது என்றாலும் ஆழ்ந்த ஞானம் படைத்தவர். புனிதர்களும், இறையியல் அறிஞர்களும், தம் பிரச்சனைகளை இவரிடம் எடுத்துச் சொல்லுவர். இவர் ஆன்மாக்களின் உள்ள நிலையை எளிதில் அறிந்து கூறுவார். முகத்தாட்சணியம் பார்க்க மாட்டார். வழியில் காணும் மக்களை நிற்கச் சொல்லி அவர் யாராயிருந்தாலும் சரி, அவர் தம் வாழ்க்கையை திருத்தி அமைக்கும்படி கெஞ்சி மன்றாடுவார். இவ்விதம் துர்வாழ்க்கையை நடத்திய வாலிபர்களையும், அநீத நடுவர்களையும், பதவியிலிருந்த தகுதியற்றவர்களையும், சீர்திருத்தியிருக்கிறார். ஆண்டுதோறும் நடந்த பொதுக் கொண்டாட்டங்களின் போது நடைபெற்ற பாவ அக்கிரமங்களைக் கண்டு இவரும் புனித பிலிப்நேரியும் மிகவும் வருந்துவர். எனவே இருவரும் சேர்ந்து இன்னொரு ஊர்வலத்தை ஓர் ஆண்டில் நடத்தினர். ஊர்வலத்தை முன் நின்று நடத்தியவர் நம் புனிதர். பிலாத்துவிடம் இழுத்துச் செல்லப்பட்ட நம் ஆண்டவரை குறிக்கும் படியே இவரது கழுத்தில் ஒரு கயிற்றை கட்டியிருந்தார். விழாக் கொண்டாட்டங்கள் நடந்த இடத்தை அடைந்ததும் ஒரு சன்னியாசியார் எழுந்து உருக்கமாக பிரசங்கித்தார். அதைக் கேட்ட மக்கள் அந்த இடத்தை விட்டு அகன்றார்கள். அந்த ஆண்டில் கொண்டாட்டங்கள் அத்துடன் முடிவு அடைந்தன. பாவத்தின் தோஷத்தையும் நல்வாழ்வின் அழகையும் பாடல்களில் எடுத்துக் கூறுவார். எப்போதும் மகிழ்ச்சியோடிருப்பார். தாழ்ச்சி நிறைந்த இவர் தம் “கப்புச்சின் சந்நியாசிகளின் கழுதை” என்று அழைப்பார்.

**சிந்தனை:**

“உலகில் உள்ள ஒவ்வொரு சிருஷ்டியையும் நாம் நல்ல விதமாக நோக்குவோமானால் அது நமது இருதயங்களை கடவுள் பக்கமாக உயர்த்தும்”. (புனித பெலிக்ஸ்)

**செபம்:**

ஆண்டவரே, நீர் கோபமாய் இருக்கும் போது உலகதைத் தண்டியாதேயும்.